Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 21-04-2026
Deposition of witness for : PW 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காவ்யா | வயது | : | 27 |
| கணவர் பெயர் | : | சுரேஷ்குமார் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தொண்டமான் நகர், 2 ம் தெரு | தொழில் | : | வீட்டுகுடித்தனம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 produced through V.C. and other accused present**

**Ld. D. Counsel Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. **1348** பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என் கணவர் வெளிநாட்டில் வேலை பார்க்கிறார்.

2) கடந்த 9.9.2025 அன்று காலை துக்கத்துவீடான மீனா என்பவர் வீட்டில் நான் இருந்தேன். அப்போது அ.சா.1 விஜயாவும் உடன் இருந்தார். அப்போது நான் வெளியில் வந்து நின்றுக்கொண்டிருந்தபோது திலகன் என்ற பையன் ஓடி வந்து துக்கவீட்டில் இருந்த என்னிடம் கலைஞர் நகர் 1வது தெருவில் சசிக்குமாரை வெட்டிவிட்டதாக சொன்னார். நான் துக்க வீட்டிற்குள் இருந்த அத்தையிடம் போய் சசிகுமாரை எங்கே என்று கேட்டேன். அப்போது அத்தை சசிக்குமார் வீட்டில் தூங்கிகொண்டிருப்பதாக சொன்னார்.

3) அப்போது நான் திலகன் என்ற பையன் வந்து என்னிடம் சசிக்குமாரை வெட்டிவிட்டார்கள் என்று சொல்லிவிட்டு போகிறான் என்ற விபரத்தை சொன்னேன். நான் என் வண்டியை எடுத்துக்கொண்டு அத்தையை ஏற்றிக்கொண்டு அத்தை வீட்டிற்கு தூங்கிகொண்டிருந்த சசிக்குமாரை பார்க்க சென்றோம். ஆனால் அவன் அங்கு இல்லை.

4) உடனடியாக புறப்பட்டு கலைஞர் நகர் 1வது தெருவிறு அதே வண்டியில் இருவரும் போனோம். அங்கு போய் பார்த்தபோது சசிக்குமார் தலை முழுவதும் சிதைக்கப்பட்டு இடது கை மணிகட்டு வெட்டப்பட்டும் காதிலும் வெட்டுபட்டு கிடந்தான். நான் என் தம்பியை யார் இப்படி செய்தது என்று அழுதேன். அதே இடத்தில் அங்கு நின்றுகொண்டிருந்த கலைஞர் நகர் 1வது தெருவை சேர்ந்த சூர்யா என்ற பையன் சக்தி என்கிற ஹரிஹரன், ராஜா என்கிற சஞ்சய், பிரபா என்கிற பிரபாகரன், சக்தியின் தம்பி கோகுல் ஆகியோர்கள் வெட்டினார் என்று சொன்னான். நான் எந்த ஆயுததத்தால் வெட்டினார்கள் என்று கேட்டதற்கு அவன் சக்தி வாளாலும், ராஜா அருவாளாலும் வெட்டினார்கள் என்று சொன்னான்.

5) கொஞ்ச நேரத்தில் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்துவிட்டனர். ஆம்புலன்சில் பாடியை மெடிக்கல் காலேஜேக்கு கொண்டு சென்றார்கள். அதன்பிறகு அ.சா.1ஐ இருசக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு தஞ்சாவூர் தாலுக்கா காவல் நிலையம் வந்துவிட்டேன்.

6) காவல்நிலையத்தில் புகாரை நான்தான் எழுதினேன். அத்தை கையெழுத்து போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள விபரங்களை நான்தான் எழுதினேன். நான்தான் எழுதினேன் என்று நானும் கையெழுத்து போட்டேன். அத்தையும் கையெழுத்து போட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள என்னால் எழுதப்பட்டது என்று எழுதி உள்ளது என் கையெழுத்து ஆகும். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும்.

7) 23.9.2025 அன்று மறுபடியும் ஆய்வாளர் அவர்கள் என் வீட்டிற்கு வந்து நீங்கள் கொடுத்த புகாரின் மீது எதிரிகளை கைது செய்துவிட்டதாக சொன்னார்கள். அவர்களிடம் எதனால் இந்த பிரச்சினை என்று கேட்டேன். அதற்கு அவர் Free Fire Game சம்பந்தமாக வாழை என்கிற தினேஸை சக்தி என்ற பையன் அடித்துவிட்டதாகவும் வாழை என்ற பையன் திலகனிடம் சொன்னதாகவும் திலகன் சசிகுமாரிடம் சொன்னதாவும் அதனால் திலகனும்,, சசிக்குமாரும் போன் செய்து சக்தியிடம் பேசியதாகவும் அதனால் சக்தி, சக்தி தம்பி கோகுல், சஞ்சய், பிரபா ஆகியோர் வரசொல்லிதான்இந்த சம்பவம் நடந்ததாக சொன்னார். நான் விசாரித்தபோது இதுதான் தெரிந்தது.

8) நான் புகார் கொடுக்கும்போது ராஜா என்றுதான் புகார் கொடுத்தேன். பிறகு விசாரித்து தெரிந்துகொண்டதில் அவன் பெயர் சஞ்சய் என்று ஆய்வாளரிடம் சொன்னேன். இந்த

சம்பவத்திற்கு எல்லாம் மூலகாரணம் ஆட்டோ ஹரி என்ற ஹரிஹரன்தான் காரணம் என்று தெரிந்தது. அவன்தான் வாளையும், அருவாளையும் கொடுத்துள்ளான் என்றும் வெட்டுங்க நான் பார்த்துக்கிறேன் என்று சொல்லி உள்ளார்.

9) இந்த விபரத்தை போலீசார் என்னை மறு விசாரணை செய்தபோது சொன்னேன்.

10) மேற்படி நான்கு நபர்களும் வெட்டும்போது மற்றவர்கள் எல்லாம் சுற்றி வளைத்துக்கொண்டு யார் தடுக்க வந்தாலும் சசிநிலைமைதான் உங்களும் என்று மிரட்டி உள்ளார்கள். இவை அனைத்திற்கு காரணம் ஆட்டோ ஹரி என்ற ஹரிஹரன்தான் காரணம்.

11) இது சம்பந்தமாக போலீசார் என்னை 9.9.2025 மற்றும் 23.9.2025 அன்று விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் இளம் வழக்கறிஞர்கள் ஆஜர் ஆனார்கள். குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.21 14:59:14 +0530